Kalanjiyam International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

Article Type: Original Research Article

Prosody and Traditions in Tolkappiyam

Dr. S. Xavier*,

Head, Department of Tamil, Loyola College of Arts and Science, Metala, Rasipuram, Namakkal District.
*Correspondence: xaviermphd@gmail.com,

Received: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

Abstract: Tolkappiyam holds the preeminent position in the tradition of Tamil grammar. This work contains the foundational concepts for prosodical traditions (Yappu Marabu), which explain the structural order, rhythmic harmony, and design of poetic compositions.

Tolkappiyar demonstrates how elements such as the letter (ezhuttu), metrical unit (asai), foot (seer), linkage (thalai), and line (adi) intertwine to create the musicality and literary beauty of Tamil poetry. These traditions served as the bedrock for the development of later prosodical treatises like Yapparungalam and Yapparungalakkarigai. Furthermore, they reflect the practical conventions utilized in Sangam literature, such as Ettuthogai (The Eight Anthologies) and Pattupattu (The Ten Idylls).

Ultimately, the prosodical traditions found in Tolkappiyam stand as a vital foundation that illustrates the antiquity and continuity of Tamil poetic grammar..

Keywords: Tolkappiyam, Tamil Grammar, Prosody (Yappu), Poetic Traditions, Ezhuttu, Asai, Seer, Thalai, Adi, Sangam Literature, Yapparungalam, Literary History

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

தொல்காப்பியத்தில் யாப்பும் மரபுகள்

***முனைவர். ச. சேவியர்,** தமிழ்த்துறைத் தலைவர், இலொயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மெட்டாலா, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கண மரபில் முதன்மையான இடத்தைப் பெறும் நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூலில் செய்யுள் அமைப்பின் ஒழுங்கு, ஓசை நயம், மற்றும் பாடல் வடிவமைப்புகளை விளக்கும் யாப்பு மரபுகளுக்கான அடிப்படைச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. எழுத்து, அசை, சீர், தளை, அடி போன்ற கூறுகள் ஒன்றோடொன்று இணைந்து தமிழ்ச் செய்யுளின் இசைநயத்தையும் இலக்கிய அழகையும் உருவாக்குகின்றன என்பதை தொல்காப்பியர் விளக்குகிறார். இம்மரபுகள் பின்னாளில் உருவான யாப்பருங்கலம் மற்றும் யாப்பருங்கலக்காரிகை போன்ற யாப்பிலக்கண நூல்களின் வளர்ச்சிக்கான அடித்தளமாகவும், சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு போன்றவற்றில் நடைமுறையாகப் பயன்படுத்தப்பட்ட மரபுகளாகவும் விளங்குகின்றன. ஆகவே, தொல்காப்பியத்தில் காணப்படும் யாப்பு மரபுகள் தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தின் தொன்மையும் தொடர்ச்சியையும் விளக்கும் முக்கிய அடிப்படையாகத் திகழ்கின்றன.

திறவுச்சொற்கள்: தொல்காப்பியம், தமிழ் இலக்கணம், யாப்பிலக்கணம் (யாப்பு), பாடல் மரபுகள், எழுத்து, அசை, சீர், தளை, அடி, சங்க இலக்கியம், யாப்பருங்கலம், இலக்கிய வரலாறு.

முன்னுரை

தமிழ் மொழியின் செம்மையும் செழுமையும் அதன் இலக்கிய மரபுகளின் ஆழத்தில் வேரூன்றியவை. அந்த மரபுகளின் உயிர்நாடியாக விளங்குவது யாப்பு ஆகும். யாப்பு என்பது கவிதையின் உடற்கட்டமைப்பையும் ஒலிநயத்தையும் ஒழுங்குபடுத்தும் இலக்கணக் கூறாகும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற கூறுகள் ஒன்றிணைந்து கவிதைக்கு இசைநயமும் கட்டுப்பாடும் அளிக்கின்றன. இவ்வமைப்புகள் கவிதையை வாசிக்க மட்டுமன்றி, கேட்கவும் அனுபவிக்கவும் உகந்ததாக மாற்றுகின்றன.

தொல்காப்பியம் தொடங்கி பிற்கால யாப்பிலக்கண நூல்கள் வரை யாப்பும் மரபுகளும் தெளிவாக வகுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்கப் பாடல்கள் முதல் பக்தி இலக்கியம், காப்பியங்கள், நவீனக் கவிதைகள் வரை யாப்பு மரபுகள் மாற்றமும் வளர்ச்சியும் கண்டாலும், அதன் அடிப்படைச் சிந்தனை காத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே யாப்பையும் மரபுகளையும் அறிதல் என்பது தமிழ்க்

கவிதையின் உள்ளார்ந்த அழகையும் பண்பாட்டுச் சுவடுகளையும் புரிந்துகொள்ளும் முக்கியமான வழியாகும். யாப்பின் அடிப்படை அமைப்புகளையும் மரபுகளின் பண்பாட்டுச் செல்வாக்கையும் அறிமுகப்படுத்தி, தமிழிலக்கியத்தின் இசைநயப் பயணத்தை வாசகன் உணரச் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. பாடும் பாடலுக்கு எழுத்து, சொல், அடி போன்றவற்றிற்கு ஓர் எல்லையும் கட்டுப்பாடும் வகுக்கப்பட்டுள்ளன. அப்படி வகுக்கப்பட்டுக் காலம் காலமாக வளர்ச்சிபெற்ற ஒரு வடிவமே 'யாப்பு என்பதாகும். இதை முதல் இலக்கண தொல்காப்பியத்தில் காணலாம்.

யாப்பைப் பற்றி வரலாறு

தொல்காப்பியர் செய்யுளியல் முதல் நூற்பாவில் 'யாத்த சீரே அடியாப் பெனாஅ ' என்று யாப்பு என்பதை ஓர் உறுப்பாகக் குறிப்பிட்டுள்ளார். பின்னர்,

"எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறிபுலவர்" (தொ.செய்.நூ.76)

என்பதில், எழுத்து, அசை, சீர், அடி என ஈண்டோதப்பட்ட அடியினால் தான் குறித்த பொருளை இறுதியளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவார் யாப்பறிந்த புலவர், என்று முன்னோர் கூற்றாகவே கூறியுள்ளார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் மேற்கண்டவாறு கூற, பேராசிரியர் செய்யுளியல் முதல் நச்சினார்க்கினியர் நிறுத்தமுறையானே யாப்புணர்த்துகின்றது என்று நூற்பாவின் அடியை எடுத்துக் காட்டி விளக்கிச் செல்கிறார். குறிப்பிடுகின்றார்.

இப்படி வகுத்துக் கூறப்படும் யாப்பு எழுவகைப்படும் என்பதை,

“பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்" (தொ.செய்.நூ.77)

என்ற நூற்பாவில் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி,அங்கதம் முதுசொல் (பழமொழி) என யாப்பு வகை ஏழு என்று முன்னோர் பகுத்துக் கூறியுள்ளதைத் தம் நூலில் எடுத்தாண்டுள்ளார். இங்கு

என்மனார் புலவர்' என்று குறிப்பிட்டுள்ளதால், இப்பகுப்பு முன்னோர் கருத்து என உய்த்துணரப்பட்டது.

“யாப்பெனப் படுவ தியாதென விளவின்
தூக்கும் தொடையும் அடியும் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே," (யா.வி. மேற் ப 16)

என்று யாப்பிலக்கண நூல்கள் கூறியுள்ளன. நன்னூலில் யாப்பு என்ற சொல்லாட்சி சிறப்புப் பாயிரத்தில் காணப்படுகிறது.

“ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே" (நன்.47)

மேலும் கட்டுதல் என்ற பொருளில் திருக்குறள், சீவக சிந்தாமணி ஆகியவற்றிலும் செய்யுள் என்ற பொருளில் பிங்கல நிகண்டிலும், உறுதி என்ற பொருளில் மணிமேகலையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

செய்யுள் உறுப்புகள்

தமிழ் யாப்பு வரலாறு தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. தொல்காப்பியர் மாத்திரை முதலாக 26 உறுப்புகளையும் அதனுடன் எண்வகை வனப்புகளையும் சேர்த்து 34 செய்யுள் உறுப்புகளைக் கூறியுள்ளார். தொல் காப்பியத்திற்குப் பின் தோன்றிய யாப்பருங்கலமும் காரிகையும் செய்யுள் உறுப்புகளாக எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறினை மட்டும் கூறுகின்றன. பிற்கால யாப்பு நூல்களிலும் பெரும்பாலும் இந்த ஆறுவகை உறுப்புகள் மட்டுமே விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியர் தனி உறுப்பாகக் கூறாது விடுத்த 'தளை' யாப்பருங்கலம், காரிகை, மற்றும் பிற்கால நூல்களில் உறுப்பாகக் கையாளப்பட்டுள்ளது. காரிகைக்குப் பின் வண்ணம், சந்தம், சிந்து ஆகிய பா வடிவங்கள் புதியனவாய் வளர்ச்சி பெற்றுள்ளன.

எழுத்திலக்கணம்

தமிழில் எழுத்துக்கு என்று தனி இலக்கணம் தோன்றினும் யாப்பிலக்கணம் கூறும் போதும் எழுத்திலக்கணம் பற்றிக் கூறப்படுகிறது. ஆனால் இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது.

"எழுத்திலக்கணத்தில் உள்ள எழுத்துக் கணக்கும் யாப்பிலக்கணத்தில் உள்ள எழுத்துக்கணக்கும் வெவ்வேறாக உள்ளன. இதற்குக் காரணம் ஓசையாகும்."1 தொல்காப்பியர் எழுத்து பற்றி எழுத்ததிகாரத்தில் கூறினமையால் செய்யுளியலில் விடுத்துள்ளார் என்று அதற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் விளக்கமளித்துள்ளனர். இதே போன்று ஐந்திலக்கண நூல்களான வீரசோழியம், முத்துவீரியம், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம் ஆகிய நான்கும் எழுத்திலக்கணம் பற்றி யாப்பதிகாரத்தில் பேசவில்லை. சுவாமிநாதம் மட்டும் எழுத்து முதல் இரண்டு, சார்பு ஈரைந்து' என்று (சுவாமி.நூ.152) முதல் எழுத்தை இரண்டாகவும், சார்பெழுத்தைப் பத்தாகவும் மொத்தம் பன்னிரண்டு வகையாகச் சுட்டுகின்றது.

காக்கை பாடினியம் எழுத்து வகையைப் பதின்மூன்று வகையாகக் கூறுகின்றது. இது யாப்பருங்கல விருத்தியுரை மற்றும் காரிகையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. பொதுவான நூற்பாவில் எழுத்துவகை கூறப்பட்டுப் பின் தனித்தனி நூற்பாக்களால் எழுத்துவகை விளக்கப்பட்டுள்ளது. சிதம்பரப் பாட்டியல் (சி.பா.நூ.2) எழுத்துக்களைப் பதினைந்தாகப் பகுத்துக் குறிப்பிட்டுள்ளது. இலக்கணச் சூடாமணி ஏழுவகையாகக் கூறுகிறது:

“குறினெடில் ஆவி குறித்தமெய் ஆய்தம்
மறுவிலுயிர் மெய்யோடு மற்ற நெறியளவும்
நேர் நிரையாம் ஈரசைக்கு நேர்ந்த உறுப்பாகி
ஏர்பெறவே நிற்கும் எழுத்து." (இலக்.சூ.நூ.2)

அதாவது, குற்றெழுத்து, நெட்டெழுத்து, ஆவியெழுத்து, மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து, உயிர்மெய்யெழுத்து, அளபெடையெழுத்து ஆகிய ஏழும் ஆகும். 'செய்யுளிலக்கணம்' கூறுகையில் காரிகை குறிப்பிட்டுள்ள மெய்யை நீக்கி, அளபெடையை இரண்டாக விரித்துப் பதின்மூன்றாகக் (செ.இ.ப.2) கூறுகின்றது. தென்னூல் (தெ.நூ.291), காரிகை கூறியவற்றுள் குறில், நெடில்,மூவினம் ஆகியவற்றை விடுத்து அளபெடையை உயிரளபெடை, ஒற்றளபெடை என இரண்டாக்கி ஔகாரக் குறுக்கத்தைச் சேர்த்து எழுத்தினைப் பத்து வகையாகப் பகுத்துள்ளது.

காரிகைக்குப்பின் காரிகையை அப்படியே பின்பற்றி எழுத்தை வகைப்படுத்தும் போக்கு பெரிதும் காணப்படவில்லை. எழுத்துக்களைக் குறைவான எண்ணிக்கையில் வகைப்படுத்தும் போக்குக் குறிப்பிடத்தக்கதாகத் தோன்றியுள்ளது. இவ்வகையில் யாப்பதிகாரமும் யாப்பு நூலும் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.2

யாப்பதிகாரம் எழுத்துக்களை மூன்று வகையாகக் கூறுகின்றது. இதைப் பாவலர் பண்ணை நூலும் பின்பற்றியுள்ளது. யாப்பு நூல் மட்டும் எழுத்தை நான்கு வகையாகக் குறிப்பிட்டுள்ளது:

“உயிர் மெய் ஆய்தம் உயிர்மெய் நான்கே
உயிர்நேர் தமிழின் எழுத்து வகைமை” (யாப்பு.நூ 6)

அசை இலக்கணம்

தொல்காப்பியர் நேரசை, நிரையசை, நேர்பு, நிரைபு, உரியசை, இயலசை என்னும் பகுப்பை அசைகளுக்கு வழங்கியுள்ளார். இவற்றுள், முதலிரண்டும் பெருவழக்காயுள்ளன. பின்வரும் நேர்பு, நிரைபு இன்று வழக்கிழந்து விட்டன.

“இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய வுரிச்சீர்" (தொ.செய்.நூ.13)

இங்குப் புதுவகைப் பெயராட்சி சூட்டப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இதுவும் தற்போது வழக்கில் இல்லை. நேரசை, நிரையசை இரண்டும் முறையே நான்கு வகைப்படும் என்பதைப் பெரும்பாலான நூல்கள் எடுத்துக்கூறியுள்ளன. அதாவது, குறில் தனித்து, குறில் ஒற்றடுத்து, நெடில் தனித்து, நெடில் ஒற்றடுத்து வருவது நேரசை. குறிலிணைந்தும், ஒற்றடுத்தும், குறில் நெடில் இணைந்தும், ஒற்றடுத்தும் வருவது நிரையசை எனப்படும்.

இலக்கண விளக்கம் (நூ.714), முத்துவீரியம் (நூ.863,864), சுவாமிநாதம் (நூ.159), இலக்கணச் சூடாமணி (நூ.3) ஆகியன நேரசை நான்கும் நிரையசை நான்கும் என விரித்துக் கூறுகின்றன. அறுவகை இலக்கணம் மட்டும் நேரசை, நிரையசை முறையே அறுவகைப்படும் என்று வரையறுத்துக் குறிப்பிட்டுள்ளது.

"ஓர் அசை ஈரசை வெவ்வேறு இருந்து
மூன்றசை தோன்றிய முறைப்படி நான்கசைச்
சொல்லொடு ஓர் அசைவந்து தோன்றல் உண்டு அதுநேர்
ஆயிற் பூஞ்சீர் நிழற்சீர் என்றும்
நிரை எனில் பூநலம் நிழல்நலம் என்றும் " (அறு.இலக்.நூ.245)

எனப் பகுத்துக் கூறியுள்ளது.

தொல்காப்பியத்திற்கும் காரிகைக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய காக்கை பாடினியம் நேரசை நிரையசைகளை முறையே 'தனியசை', 'இணையசை' என்று வேறு பெயராட்சியில் ஆராய்ந்து பொருத்தமுள்ள வகையில் கூறியுள்ளது.

"தனியசை என்றா இணையசை என்றா
இரண்டென மொழிமனார் இயல்புணர்ந் தோரே" (காக்.பா.நூ.5)

இந்தச் சொல்லாட்சி பிற்கால நூல்களில் புலவர் குழந்தையின் யாப்பதிகாரம் தவிர்த்த மற்ற நூல்களில் காணப்படவில்லை. யாப்பதிகாரம் தனியசை, இணையசை என அசையின் இருவகையைக் குறிப்பிடுகிறது. மேலும் ச. பாலசுந்தரனாரின் 'தென்னூல்' அசை வகைகளுக்கு,

"த-தா தம்தாம் தனதனா தனம்தனாம்
எனுமிவை நேர் நிரை அசைக்குச் சந்தமாம்" (தெ.நூ.297)

என்று சந்தக் குறியீடுகளைக் கூறியுள்ளது. வண்ணப்பாக்களுக்குச் சந்தக் குழிப்பு வாய்பாடாகப் பயன்படுத்தப்படுவது போன்று சந்தக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது புது முயற்சி என்ற போதிலும் அருகிய ஒன்றாகக் காணப்படுகிறது.

சீர் இலக்கணம்

தொல்காப்பியர் ஈரசைச்சீர், மூவசைச்சீர் என்ற இருவகையைக் குறிப்பிடுகின்றார். அவற்றிற்கு இயற்சீர், உரிச்சீர் என்ற சொல்லாட்சியையும் வழங்கியுள்ளார்.

"ஈரசை கொண்டும் மூவசை புணர்த்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே" (தொ. செய்.நூ.12)

இரண்டு அல்லது மூன்று அசைகள் ஓசை பொருந்தி நிற்றல் சீர்க்குரிய இலக்கணம் என்பது இளம்பூரணர் கருத்து. நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் இக்கருத்தை ஏற்றும் விரிவுபடுத்தியும் விளக்கியுள்ளனர். யாப்பருங்கலம் இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என மூன்று வகையைக் கூற, காரிகை இயற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், அசைச்சீர், பொதுச்சீர் என ஐந்துவகையாக வழங்குகின்றது.

காரிகைக்குப் பின் வீரசோழியம் சீர்வகைகளின் பெயர்களை வேறு சொல்லாட்சியில் குறித்துள்ளது. இயற்சீரை முதற்சீராகவும், உரிச்சீரை இடைச்சீராகவும், வஞ்சிச்சீரைக் கடைச்சீராகவும் (வீரசோ.கா.107,108) குறிப்பிடுகின்றது. இப்பெயராட்சிகள் காரண காரியத்துடன் வைக்கப்பட்டுள்ளன. இக்கருத்தை,

"தமிழ் யாப்பியல் வரலாற்றில் இடைக்காலத்தில் பயன்பாட்டு நோக்கிலும் தனிச்சிறப்பு நோக்கிலும் சில யாப்புக் கூறுகள் முதல், இடை, கடை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வடிப் படையிலோ உத்தமம், மத்திமம், அதமம் என வகைப்படுத்தும் வடமொழி மரபின் அடிப்படையிலோ சீர்கள் முதற்சீர், இடைச்சீர், கடைச்சீர் என வீரசோழியத்தில் பெயரிட்டு வகைப்படுத்தப் பட்டுள்ளன"3

என்று குறிப்பிட்டுள்ளது, மேற்கூறிய கருத்திற்கு அரண் சேர்ப்பதாகும்.

அறுவகை இலக்கணம் சீர்களைச் சொல் என்ற பெயரால் (அறு-இலக். நூ.244) வழங்கியுள்ளது. இந்தப் பெயராட்சி பிற இலக்கண நூல்களில் காணப்படவில்லை. மேலும் ஐந்தசைச் சீர் என்ற புதிய வகை சீரையும் குறிப்பிட்டுச் சென்றுள்ளது என்பதை,

"இணையசைச் சொல்லே ஒன்றோடொன்று இணைந்து
நாலசை யாதலுண்டு அம்முறை ஆம்கால்
முன்மொழி இயல்பில் பிறழாது ஒழிந்த
பின்வரும் நேர்நேர் தண்பூ, நிரைநிரை
நறுநிழல், நேர்நிரை தண்ணிழல், நிரைநேர்
நறும்பூ ஆம்எனத் திரிதரும் அன்றே." (அறு.இலக்.நூ.244

இந்நூற்பாவின் மூலம் அறியலாம்.

தளை இலக்கணம்

தொல்காப்பியர் தளையைத் தனி உறுப்பாகக் கூறாது விடுப்பினும் அடியிலக்கணம் கூறுகையில் தளையும் தொடையும் அடியில் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

"அடியுள்ளனவே தளையொடு தொடையே" (தொ.செய்.நூ.33

இதற்கு அடுத்த நூற்பாவில் தளையும் தொடையும் இன்றி அடி நடக்காது எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். தளையைக் கூறாது விடுத்தாலும் அதன் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார். தளையைத் தனி உறுப்பாகக் கூறாமைக்குக் காரணம்,எழுத்து என்றாலும் அசை என்றாலும் சீர் என்றாலும் அடி என்றாலும் தொடை என்றாலும் சான்று காட்ட உறுப்பாக ஒரு கூறைக் காட்டமுடியும், ஆனால் தளையைக் காட்ட உறுப்பாக ஏதும் இன்மையே ஆகும்.

“தொல்காப்பியர் தளையைத் தனி உறுப்பாகக் கொள்ளா மைக்குரிய காரணங்களை ஆராயும் உரையாசிரியர்கள் பின்வரும் காரணங்களைக் கூறுவர். 'எழுத்து அசை சீர் அடிபோல் தளை வெளிப்பட்ட தனியான உறுப்பு இல்லை."4

இக்கருத்து மேற்கூறப்பட்ட கருத்திற்கு அரணாக அமைந்துள்ளது.

யாப்பருங்கலம் ஒரு சீரோடு ஒரு சீர் ஏற்று நிற்பது 'தளை' என இலக்கணம் கூறுகின்றது. அவற்றோடு தளை எழுவகைப்படும் என்றும் வகைப்படுத்தியுள்ளது. இதே வகையைக் காரிகையும் பின்பற்றியுள்ளது. காரிகைக்கு முன் தோன்றிய காக்கைபாடினியம் எழுவகைத் தளையையும் தனித்தனி நூற்பாக்களால் விளக்கியுள்ளது.

ஐந்திலக்கண நூல்களில் ஒன்றான இலக்கண விளக்கம் (இலக்.வி.நூ.717) தளை எழுவகை என்று குறிப்பிடுவதோடு தன்சீர் இறுதி தன்வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுதலும் ஒன்றாமையும்' என இருவகையாகப் பொதுப் பிரிவைக் கூறுகின்றது. சுவாமிநாதம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய மூன்றும் மேற்கண்ட வகையை குறிப்பிட்டுள்ளன.

தொடை இலக்கணம்

தொல்காப்பியம் ஓசையைக் கூறிச் சென்று பின்னர் தொடை வகைகளை விளக்குகின்றது. முதலில் மோனை, எதுகை, முரண், இயைபு நான்கையும், பின் அளபெடைத் தொடையையும் சேர்த்து ஐந்து வகையாகக் கூறுகின்றது. மேலும் பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரனிறை, இரட்டை யாப்பு என ஐந்தையும் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியம் கூறிய மோனை முதலான தொடைகள் ஐந்துடன், அடி. இணை முதலான தொடை விகற்பங்கள் எட்டைச் சேர்த்துத் தொகை வகை நாற்பது என்று கலம், காரிகை குறிப்பிட்டுள்ளன. விகற்பமில்லாத தொடைகளாக அந்தாதி, இரட்டை, செந்தொடை மூன்றையும் விளக்கியுள்ளன.

வீரசோழியம் தொடை வகைகளாக எதுகை மோனை ஆகிய இரண்டை மட்டுமே பேசுகின்றது. 'எதுகை எனினும் தொடை எனினும் ஒக்கும்' என்கின்றது. எதுகை, மோனை பற்றி விரிவாகப் பேசியுள்ளது

தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம். முத்துவீரியம் ஆகியன கலம், காரிகை கூறும் தொடை வகைகளையே கூறுகின்றன. அவற்றுடன் வீரசோழிய உரையிலும் தொன்னூல்

விளக்கத்திலும் மோனைக்கான எழுத்துவகைகளாக அ.ஆ.ஐ.ஔ இ.ஈ.எ.ஏஉ,ஊ,ஒ,ஓ,த-ச,வ-ம,ஞ-ந போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன:

"மோனைக்கு இனமே அ ஆ ஐ ஔவும்

இஈஎரவும் உஊஒ ஓவும்

சதவும் ஞநவும் மலவும் எனவே" (தொ.வி.நூ.213)

என்பதை இந்நூற்பாவால் அறியலாம், தொன்னூல் விளக்கம் எதுகைக்குப் புதுவகையாகத் தலையாகு எதுகை, இடையாகு எதுகை, இனவெதுகை என மூன்றைச் சுட்டியுள்ளது.

.அடி இலக்கணமும் வகைகளும்

நான்கு சீர்கள் கொண்டு நடப்பது அடி (தொ.நூ.1293) எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவ்வகை அடிகளில் பயின்று வருவது தளையும் தொடையும் என்பார். இவை இரண்டும் இன்றி அடிகள் இல்லை என்பது தொல்காப்பியத்தின் கருத்தாகும். அடியின் சிறப்பே பாட்டு (தொ.நூ.1296) என்று சிறப்பித்துப் பேசுகிறது. யாப்பருங்கல விருத்தியுரைகாரர் 'தளையால் ஆனது அடி' எனவும் அடிவகைகளை குறிப்பிட்டுள்ளார்.

அடியினைப் பற்றி யாப்பருங்கல 26 மேற்கோள் நூற்பாக்களில் காணப்படும் வரையறைகள் நோக்கத் தக்கதாகும். தளைகள் தன்னிடம் பொருந்தி அடுத்து வரும் வண்ணம் நடப்பதனால் அடி எனப் பெயர் பெற்றது. பலவும் சிலவுமாகிய தளையொடு பொருந்திய சீர்கள் அடுத்து நடப்பதால் 'அடி' எனக் காரணப் பெயர் பெற்றது.

"தடுத்தனர் தட்ட தளைபல தழுவியும்

அடுத்த சீரின் அடிஎனப் படுமே" (யா.வி.மேற். ப. 109)

என்று செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் அடியுள் எழுத்தும் அசையும் சீரும் தளையும் தொடையும் பொதிந்தே காணப்படுகின்றன. இவ்வகை உறுப்புகள் இன்றி 'அடி' என்னும் உறுப்பு இல்லை என்பதே திண்ணம். இதையடுத்து யாப்பருங்கலக்காரிகை, கலத்தில் கூறப்பட்ட கருத்தை எடுத்துக்காட்டி அடிவகைகளை விளக்கியுள்ளது. கற்பித்தல் குழலில் பெருவழக்காகப் பயன்பாட்டில் உள்ளதால் பிற்கால யாப்பிலக்கண நூல்களும் இதனையே அடியொற்றி அடி இலக்கணங்களை நிறுவியுள்ளன. அடி இலக்கணம் தொல்காப்பியக் காலத்தில் இருந்து மடை மாற்றம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

முடிவுரை

- தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்ட இந்த மரபுகள், கவிதைக்கு கட்டுப்பாடையும், அதே நேரத்தில் சிந்தனைக்கு விரிவையும் வழங்கின.
- காலப்போக்கில் சமூக மாற்றங்களும் இலக்கிய வளர்ச்சியும் நிகழ்ந்தபோதிலும், யாப்பு மரபுகளின் அடிப்படை நெறிகள் சிதையாமல் நிலைத்துள்ளன.
- சங்க இலக்கியம் முதல் பக்தி இலக்கியம், காப்பியங்கள், நவீனக் கவிதைகள் வரை யாப்பு மரபுகள் பல்வேறு வடிவங்களில் மாறுபட்டு வெளிப்பட்டாலும், அதன் உள்ளார்ந்த இசைநயமும் ஒழுங்கும் தமிழ்க் கவிதையின் அடையாளமாகத் தொடர்கின்றன..
- யாப்பு மரபுகளைப் புரிந்து கொள்வது என்பது இலக்கண அறிவை மட்டும் அல்லாது, தமிழரின் பண்பாட்டு சிந்தனை, அழகியல் உணர்வு, இலக்கிய மரபுத் தொடர்ச்சி ஆகியவற்றையும் அறிதலாகும். இம்மரபுகளை காத்து, காலத்திற்கு ஏற்ற வகையில் புதுமையுடன் பயன்படுத்துதல் தான் தமிழ்க் கவிதையின் எதிர்கால வளர்ச்சிக்கான உறுதியான பாதையாக அமையும்.

அடிக்குறிப்புகள்

[1]. பொற்கோ, புதிய நோக்கில் தமிழ் யாப்பு, ப.26.

[2]. மணிகண்டன், தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி, ப. 109

[3]. மேலது,ப.112

[4]. ஆதிருநாகலிங்கம், இருபதாவது கருத்தரங்கு ஆய்வுக்கோடை தொகுதி -2

[5]. தளை (கட்டுரை) ப. 258